**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102063

1. District மாவட்டம் : திருச்சி PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 2/18 Date: நாள் 31.01.2018

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம்-1988 Sections பிரிவுகள்: 7 of PC Act-1988

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 29.01.18 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 1600 hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.01.2018 Time நேரம் : 1500 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — 20 KM கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி — தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகம், சிப்காட் தொழிற்பேட்டை, துவாக்குடி, திருச்சி-15

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — பா. முரளிதரன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — பாலகிருஷ்ணன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 22.11.1967
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் சுயதொழில்
(g) Address : முகவரி — கதவு எண் 51-A, அம்மையப்பா இல்லம், கல்மேட்டு தெரு, வீரேஸ்வரம், ஸ்ரீரங்கம், திருச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. வெங்கசாமி, மாவட்ட சுற்று சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகம், துவாக்குடி, திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

புகார்தாரர், அவரது சொந்த வேலை காரணமாக வெளியூர் சென்றதால் புகார் அளிப்பதில் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 31.01.2018 பிற்பகல் 15.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி, ஸ்ரீரங்கம், வீரேஸ்வரம், கல்மேட்டுதெரு, கதவு எண்.51-A, அம்மையப்பா இல்லத்தில் வசித்து வரும் டி.என்.பாலகிருஷ்ணன் மகன் பா.முரளிதரன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அந்த மனுவை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு அனுப்பி, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்ய, அனுமதி பெற்று, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, துவாக்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய திருச்சி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.ரெங்கசாமி மற்றும் புகார்தாரர் திரு.பா.முரளிதரன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி முதல்நிலை விசாரணை இரகசியமாக செய்யப்பட்டது. புகார்மனுவில் கூறப்பட்டிருந்தபடி புகார்மனுதாரர் திரு.பா.முரளிதரனிடம், எதிரி ரெங்கசாமி கையூட்டாக பணம் கேட்டுள்ளார் என்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தெரியவந்தது. ஆகையால் புகார்தாரரின் புகார் மனுவின் பேரில் வழக்கு பதிவு செய்ய காவல் கண்காணிப்பாளர் (தெற்கு சரகம்), ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களின் அனுமதி பெற்று இன்று 31.01.2018 இரவு 20.00 மணிக்கு திருச்சி, ஊழல்

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் K. [illegible] பதவி காவல் துணை கண்காணிப்பாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. [signature] 31/1/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

B. Muralidharan 31/01/18

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.02.2018

Name: பெயர் ம. [illegible]
Rank: நிலை காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு
திருச்சி

<u>திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.02/2018ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......</u>

தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.2/2018 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி 31.01.2018 அனுப்புநர் பா.முரளிதரன், த/பெ டி.என்.பாலகிருஷ்ணன், கதவு எண்.51-A, "அம்மையப்பா இல்லம்", கல்மேட்டுதெரு, வீரேஸ்வரம், ஸ்ரீரங்கம், திருச்சி. பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, திருச்சி. ஐயா, திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், தா.பேட்டை, பூலாஞ்சேரி கிராமத்தில் சுமார் 24 ஏக்கர் நிலம் தற்போது என் பெயரிலும், திரு.ஆல்பர்ட் என்பவர் பெயரிலும் உள்ளது. இந்த நிலத்தில் பூலாஞ்சேரி கிராம சர்வே எண்.678, 677/7, 680/1E-இல் உள்ள நில பரப்புகளில் அம்மையப்பா புளூ மெட்டல்ஸ் என்கிற பெயரில் கிரஸர் தொழில் நடத்துவதற்கு அனுமதி வேண்டி, திருச்சி, துவாக்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட அலுவலகத்தில் 2016 ஆம் ஆண்டில் விண்ணப்பம் அளித்திருந்தேன். இந்த நிறுவனத்திற்கு நான் நிர்வாக பங்குதாரராகவும், திருச்சி கே.கே.நகரைச் சேர்ந்த மேற்படி திரு.ஆல்பர்ட் பங்குதாரராகவும் இருப்பதாக அந்த விண்ணப்பத்தில் தெரிவித்திருந்தேன். எங்களது இந்த விண்ணப்பத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய திருச்சி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் 2017 ஆம் ஆண்டில் நிராகரித்து உத்தரவிட்டிருந்தார். மேலும், அந்த உத்தரவில் சென்னையில் உள்ள தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில் உள்ள அப்பலட் அத்தாரிட்டியிடம் மேல்முறையீடு செய்து நிவாரணம் தேடிக்கொள்ளும்படியும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி நாங்கள் சென்னையில் உள்ள தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில் உள்ள அப்பலட் அத்தாரிட்டியிடம் மேல்முறையீடு செய்து, APPEALS 28 & 29 /2017- இல் 25.04.2017 அன்று மேற்படி திருச்சி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளரால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக வழங்கப்பட்ட உத்தரவை ரத்து செய்தும், விண்ணப்பதாரரின் நிறுவனத்தை ஆய்வு செய்து நடத்துவதற்கு அனுமதி அளிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் உத்தரவிடப்பட்டிருந்தது. இதன்படி திருச்சி மாவட்ட மாசுக்கட்டுப்பாடு வாரிய அலுவலகத்தை அணுகியபோது, அங்கிருந்தவர்கள் இணையதளம் மூலம் புதிதாக விண்ணப்பிக்கும்படி தெரிவித்தனர். அதனால் நான், கிரஸர் நடத்துவதற்கு அனுமதிவேண்டி, அப்பலட் அத்தாரிட்டி ஆர்டர், ஆடிட்டர் சர்டிபிகேட் மற்றும் கிரஸர் யூனிட் போட்டோ ஆகியவற்றை இணைத்து, 03.01.2018 தேதியிட்டு கடிதம் ஒன்றை திருச்சி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்காக கொடுத்தேன். பின்னர் மேற்படி அலுவலகத்தில் என்னுடைய விண்ணப்பம் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது. சுமார் 15 நாட்களுக்கு முன்னர் எங்களுடைய கிரஸ்ரை திருச்சி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தின் அலுவலர் ஒருவர் நேரில் வந்து பார்வையிட்டு, ஆய்வு செய்துவிட்டு விபரங்கள் கேட்டுச் சென்றார். என்னுடைய இந்த

விண்ணப்பத்திற்கு ஏதேனும் அனுமதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை தெரிந்து கொள்வதற்காக 29.01.2018 அன்று மாலை சுமார் 4 மணியளவில் துவாக்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய திருச்சி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று, அங்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.ரெங்கசாமி அவர்களை அவரது இருக்கையில் தனியாக சந்தித்து விபரம் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், அப்பலட் அத்தாரிட்டியிடம் ஆர்டர் வாங்கிட்டா போதுமா, அந்த ஆர்டரை படிச்சு பார்த்திங்களா, உங்க கிரஸர இன்ஸ்பெக்ட் பண்ணி மெசர்மெண்ட் எடுத்து நாங்க சேட்டிஸ்பைடுஆன பிறகு, கிரஸர ஆப்பரேட் பண்ண ஆர்டர் போடும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். அதற்கு நான் அவரிடம், நம்ப ஆபிசிலேருந்து வந்து இன்ஸ்பெக்ட் பண்ணிடாங்கசார் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம், நான் என்ன சொல்லவர்றேன்னு உங்களுக்கு புரியலையா, எனக்கு தனியா 1,50,000/- ரூபாய கொடுத்தீங்கனா, கிரஸர ஆப்பரேட் பண்ண பர்மிட் ஆர்டர் கொடுத்திடுவேன் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், ஏற்கனவே 2016 ஆம் ஆண்டில் போர்டுக்கு கட்ட வேண்டிய பீஸ் கட்டிடேன். மேலும் அப்பலட் அத்தாரிட்டி ஆர்டர் பெறவும் அட்வகேட் செலவு நிறைய பண்ணிட்டேன் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம், அதெல்லாம் என்கிட்ட சொல்லாதீங்க, இந்த தொழில்ல எவ்வளவு லாபம் கிடைக்கும்னு எனக்கு நல்லாவே தெரியும், நான் சொன்ன பணத்தை கொடுத்தீங்கனா உங்களுக்கு உடனே பர்மிட் ஆர்டர் கிடைக்கும், இல்லேனா நீங்க தொழில் செய்யமுடியாது என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. இருந்தாலும், நான் அப்போது அவரிடம், முதல்ல 50,000/- ரூபாய அட்வான்ஸா கொடுத்திடுறேன் சார், ஆர்டர்போட்ட பிறகு மீதி பணத்தை கொடுத்திட்டு ஆர்டர வாங்கிக்கிறேன் சார் என்று சொன்னதும், அவர் என்னிடம், சரிசரி முதல்ல 50,000/-த்த கொண்டு வாங்க என்று சொன்னார். அப்போது அவரிடம் சரிங்க சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நேற்று எனது சொந்த அவசர வேலை காரணமாக வெளியூர் சென்றுவிட்டேன். என்னிடம் லஞ்சம் கேட்ட தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் திருச்சி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.ரெங்கசாமி மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.... (B.Muralidharan) 31/01/2018. Submitted to the Court of the Hon'ble Special Judge for the trial cases of the PC Act-1988, Trichy. Received this report at 15.00 hours on 31.01.2018 and registered a case in Trichy V&AC Cr.No.2/2018 u/s 7 of PC Act, 1988 at 20.00 hrs on 31.01.2018. Sd... (M.Navaneetha Krishnan) 31.01.2018 (M.NAVANEETHA KRISHNAN) Inspector of Police, V&AC, Trichy.

M. N [signature] 3/1/18
(M. NAVANEETHA KRISHNAN)
Inspector of Police
V&AC, Trichy.